





**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 02.04.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்











## இந்திய நிகழ்வுகள்

- முதல் முறையாக வாக்களிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக **“சங்கல்ப் (Sankalp)”** என்ற மொபைல் செயலியை அசாம் மாநிலத்தின் போங்கைகான் மாவட்ட நிர்வாக அமைப்பு உருவாக்கியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **5G தொழில்நுட்ப முறை கொண்ட உலகின் முதல் மாவட்டமாக சீனாவில் உள்ள ஷாங்காய் அறிவிக்கப்பட்டது.**
    - இது மூன்றாம் தலைமுறை கூட்டாண்மை திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கம்பியில்லா தகவல் தொடர்பு தொழில்நுட்பமாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த **“ரோஜர் பெடரர்”** அமெரிக்காவின் **ஜான் இன்னரை** வென்று சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
    - பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் **“ஆஷ்லி பர்டி”** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமானது (ISRO), பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பிற்கு (DRDO) உதவுவதற்காக மின்னணு உளவுத் துறை செயற்கை கோளான **“எமிசாட்” (EMI SAT)** மற்றும் **28 வெளிநாட்டு செயற்கை கோளுடன் 01.4.2019 அன்று வெற்றிகரமாக “PSLV - C45” இராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.**
    - **436 கி.கி எடையுள்ள எமிசாட், இராணுவத்திற்கு விரோதமான ரேடார்களைக் கண்டறிய உதவுகிறது.**
- குறிப்பு:

- PSLV – C45 இராக்கெட்டில் அனுப்பப்பட்ட 28 செயற்கைகோள்களில் 24 செயற்கைகோள் அமெரிக்காவிற்கு சொந்தமானது. அதில் FLOCK – 4A → 20, LEMUR – 4 ஆகியவை அடங்கும்.
- 2 செயற்கைகோள் லித்துவேனியாவிற்கு சொந்தமானது, அதில் Blue Walkerl மற்றும் M6P ஆகியவை அடங்கும்.
- சுவிட்சர்லாந்தின் Astro Cast – 2 செயற்கோளும், ஸ்பெயினின் Aistech Sat – 3 செயற்கைகோளும் அனுப்பப்பட்டது.

- **சீனாவின் இரண்டாவது தலைமுறை தரவு ரிலே செயற்கைகோளான Tianlian II – 01 என்ற செயற்கைகோள் லாங் மாாச் - 3B என்ற இராக்கெட் மூலம் சிங்சாங் செயற்கைகோள் ஏவுதளத்திலிருந்து சீனாவானது வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.**

## பொருளாதார நிகழ்வுகள்

- பொதுத்துறை வங்கிகளான, விஜயா மற்றும் தேனா வங்கிகள் 1.04.2019 (நேற்று) முதல் **"பாங்க் ஆப் பரோடா"** வங்கியுடன் இணைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
  - இந்த இணைப்பை அடுத்து நாட்டின் பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை 18 ஆக குறைகிறது. **பேங்க் ஆப் பரோடா-வானது இந்தியாவின் மூன்றாவது பெரிய வங்கியாக உருவெடுத்துள்ளது.**
- குறிப்பு:
  - முதலிடத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும், இரண்டாவது இடத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கியும் உள்ளது.

- **இந்திய ரிசர்வ் வங்கி (RBI) துவங்கிய தினம் - ஏப்ரல் 1**
  - முதல் உலகப்போருக்குப்பின் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தீர்க்க **"ஹில்டன் யங் ஆணையத்தின்"** பரிந்துரையின்படி, **1935 ஏப்ரல் 1ம் தேதி கல்கத்தாவில் தொடங்கப்பட்டது. 1937ல் மும்பைக்கு மாற்றப்பட்டது.**
- குறிப்பு:
  - ரிசர்வ் வங்கியின் முதல் கவர்னர் சர் ஆஸ்போர்ன் ஆர்கெல்

ஸ்மித் ஆவார்.
  - ரிசர்வ் வங்கியின் கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியர் சி.டி. தேஷ்முக் ஆவார்.
  - ரிசாவ் வங்கியானது, 1949 ஜனவரி 1ம் தேதி தேசியமயமாக்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **ஒடிசா தினம் - ஏப்ரல் 01**
  - பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், பீகார் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த ஒடிசா 1936 ஏப்ரல் 1 அன்று முதல் மொழிவாரி மாநிலமாக பிரிக்கப்பட்டது. இந்த நாள் **"உட்கல் திவாஸ்" (ஒடிசா தினம்)** என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

We Shine Academy ™